
# ஆர்ட் போஸ்ட்

தேவையற்றவை என்று தூக்கியெறியப்பட்ட எந்தப் பொருளாக இருந்தாலும் பரவாயில்லை. பித்தளைக் கம்பிகள், பழுதடைந்த கடிகாரத்தின் பாகங்கள், கோணித்துணி, தோல் துண்டுகள், அச்சிடுவதற்காகச் செய்யப்பட்ட பிளாக்குகள், பழைய பனையோலைச் சுவடிகள் என்று எதையும் விட்டு வைப்பதில்லை, எம்.ஜி. ரஃபீக் அகமது எனும் மதுரை ஓவியர். அனைத்துக்கும் ஒரு கலை அந்தஸ்தைக் கொடுத்துவிடுகிறார்.

ஓவியக் கல்லூரியில் சேராமல், ஓவியக்கலை மீது இருந்த ஆர்வத்தினால் தாமாகவே ஓவியம் பயின்றவர் இவர். 32 வயது நிரம்பிய இவர் தைல வண்ண ஓவியங்கள், 'கொலாஜ்' எனப்படும் கலவை ஓவியங்கள் ஆகியவற்றில் குறியீட்டு ரீதியான ஒரு மொழியில் பேசுகிறார்.

நாம் ஒரு கனவைக் கண்டுகொண்டிருக்கிறபோது, அபத்தமான பல விஷயங்கள் மிகவும் உண்மையானவை போலத் தோன்றும். அவற்றில் ஏதும் அபத்தம் இல்லை என்பது போலத் தோன்றும். விழிப்பு வந்த பிறகுதான் நாம் கண்ட கனவு எவ்வளவு அபத்தமாக இருந்தது என்று நமக்குப் புரியும் (இது தற்காலத் தமிழ் சினிமாவுக்கும் பொருந்தும்). ஆனால், அந்த அபத்தத்தில் ஒரு சுகம் இருப்பதை நாம் மறுக்க முடியாது.

இதுபோலத்தான் சிறு குழந்தை ஒன்று கையில் கிடைக்கும் பொருள்களையெல்லாம் வைத்து



தனக்கென்று ஒரு உலகத்தைப் படைப்பது போல ரஃபீக் அகமது தனது கொலாஜ் ஓவியங்களைச் செய்கிறார். இவை அபத்தமானவை. ஆனால், உணர்வு ரீதியால் ஆழமானவை.

அண்மையில் சரளா ஆர்ட் சென்டரில் நடந்த எம்.ஜி. ரஃபீக் அகமதுவின் ஓவியக் கண்காட்சியில் வைக்கப்பட்ட படைப்புகள் அனைத்தும் முழுக்க முழுக்க உருவங்களைச் சார்ந்தவை என்று சொல்ல முடியாது. அதே நேரத்தில் முழுக்க முழுக்க அரூபமானவை என்றும் சொல்ல முடியாது. இரண்டையும் அந்தப் படைப்பின் தொனியை உருவாக்கும் விகிதாசாரத்தில் அளவுடன் கலந்து தனது படைப்புகளை உருவாக்குகிறார்.

கலையில் குறியீடுகள் குறித்து ஆழமாக ஆராய்ந்தவரான சுசான் லேங்கர் எனும் தத்துவவாதியின் கருத்துப்படி குறியீடுகளில் இரண்டு வகை உண்டு: ஒன்று – அறிவுபூர்வமான செய்திகளைச் சொல்லும் கணிதக் குறியீடுகள். இரண்டு – உணர்ச்சியைத் தெரிவிக்கும் குறியீடுகள். கணிதக் குறியீடுகள் உணர்ச்சியைத் தெரிவிப்பதில்லை. இவை அறிவுபூர்வமானவை. ரஃபீக் அகமது போன்ற ஓவியர்கள் வெளியிடும் குறியீடுகள் – உணர்ச்சியைத் தெரிவிக்கப் பயன் படுபவை. இவை ஏதேனும் ஒரு செய்தியைச் சொல்லத்தான் வேண்டுமென்ற கட்டாயம் இல்லை.

அரிச்சுவடி படிக்கும் குழந்தையை எடுத்துக் கொள்வோம். அணில், ஆடு எனும் பாடங்களை அது படிக்கிறது. அதன் பாடப் புத்தகத்தில் அணிலின் வண்ணப்படம் இருக்கிறது. அதற்குப் பக்கத்தில் 'அணில்' என்ற வார்த்தை அச்சிடப்பட்டு இருக்கிறது. குழந்தை முதலில் அணிலின் படத்தினால் கவர்ந்திழுக்கப்படுகிறது. ஆனால், அந்த அணில் படத்திலேயே அதன் கவனம் செல்லுமாறு அது விடப்படுவதில்லை. அணில் படத்தின் வண்ண ஒழுங்கு, வடிவ அமைதி, உயிர்த்துடிப்பு ஆகியவற்றில் அதன் முழு கவனம் செல்வது இல்லை. அணில் படத்தைப் பார்த்தவுடன் அணில் என்ற வார்த்தைக்கு அது சென்று விடுகிறது.

ஓவியத்தை எப்படிப் பார்ப்பது என்ற பயிற்சியற்றவர்கள் இப்படித்தான் நடந்து கொள்கிறார்கள். ரஃபீக்கின் ஓவியத்தைப் பார்க்கிறவர்கள் அதற்குள் நுழைந்து அதன் பார்வை ரீதியான அழகுகளை ரசிக்கத் தவறிவிடுகிறார்கள். அந்த ஓவியம் உணர்வுரீதியாகப் பார்வையாளனுடன் பரிமாறிக் கொள்வது என்ன என்பதைப் புரிந்துகொள்வதில்லை. மாறாக, அந்தப் படம் என்ன சொல்கிறது... அதன் பயன்பாடு என்ன என்கிற கேள்விகளுக்குள் நுழைந்து விடுகிறார்கள். ரஃபீக் அகமதுவின் ஓவியங்கள் இத்தகைய வினாக்களுக்குச் சில சமயங்களில் பதில் தர நேரலாம். ஆனால், இவரது குறியீட்டு மொழி அறிவுரீதியான அர்த்தத்தைக் காட்டிலும், உணர்வு ரீதியான அர்த்தத்தையே அதிகம்



எம்.ஜி. ரஃபீக் அகமது

தருகின்றது.

உதாரணமாக, 'வீடு' எனும் தலைப்பிடப்பட்ட அவரது தைல வண்ண ஓவியத்தை எடுத்துக் கொண்டால் அதில் வெள்ளை அங்கி அணிந்த ஒரு மனித உருவம், கூரையில்லாத நான்கு தூண்களுக்கு நடுவில் நிற்கிறது. கையில் சிவப்பு மலர்கள். தூண்களுக்கு இடையில் கொடி, கயிறு போன்ற ஒன்றில் சிவப்புத் துணி போன்ற ஒன்று தொங்குகிறது. தரையில் சருகுகள் உதிர்ந்தது போன்ற வெளிச்சம் விளையாடும் பூமி. வானம் மிகவும் கலவரப்பட்டுக் காணப்படுகிறது. நீலவானில் வெண்மேகங்க்ள் திரண்டு குழப்பத்துடன் உள்ளன.

தன்க்கென்று சொந்தமாக ஒரு வீடு, வாசல் வேண்டுமென்று அலைந்து களைத்த இன்றைய மனிதனை உருவகிக்கிறது இந்த ஓவியம். இது வீடு கிடைக்காமல் போவதன் பொருளாதார, சமூகவியல் காரணங்கள் குறித்த தகவல்களைக் கொடுப்பதில்லை. மாறாக, தங்குவதற்கென்று ஒரு கூரை கிடைக்காமல் அலைக்கழியும் மனிதனின் நிர்க்கதியான நிலையை உணர்வு நிலையில் தெரிவிக்கிறது.

'காலமும், மரணமும்' என்று தலைப்பிடப்பட்ட இவரது கொலாஜ் படைப்புகள் கவிதைத்தனமானவை. ஒன்றுக்கொன்று தொடர்பற்ற பல பொருள்களை வெட்டி, ஒட்டி படைப்புகளைச் செய்திருக்கிறார். இவற்றில் ஒன்றில் நடுநாயகமாக கண் ஒன்று இருக்கிறது: கீழே கடிகாரத்தின் உதிரிபாகமான ஒரு சக்கரம். ஓவியக் காகிதத்துக்குள் இருக்கும் வெற்றிடத்தை இலைபோன்ற பொருள்களால் நிரப்பி, காலம் சம்பந்தப்பட்ட, காலம் உருண்டோடி இறுதியில் நாம் சந்திக்கும் மரணம் சம்பந்தப்பட்ட சிந்தனைகளை நமக்கு ஏற்படுத்துகிறார்.

எம்.ஜி. ரஃபீக் அகமது, மதுரையின் ஓவிய இயக்கத்தில் ஆற்றும் பணி மிக முக்கியமானது. மேலமாசி வீதியில் இரும்புப் பொருட்கள் விற்கும் கடையை நடத்திவரும் இவரது தந்தையும், சகோதரர்களும் கலைக்கென்று இவரை அளித்துவிட்டனர்!

'ரஃபீக் ஆர்ட் காலரி' என்ற பெயரில் கலைக்கூடம் ஒன்றை நடத்தி வருகிறார். தாகூரின் சாந்தி நிகேதனில் ஓவியப் பேராசிரியராகப் பணியாற்றி ஒய்வுபெற்று, இன்று மதுரையில் வாழும் பெருமாள் ஐயாவிலிருந்து இன்றைய இளைய தலைமுறை ஓவியர்கள் வரை அனைவரையும் இணைத்து அவர்களது ஆலோசனைகளுடன் இயங்கிவரும் ரஃபீக் அகமதுவின் ஊக்கம் அளவற்றது.

தமிழகத்தின் ஓவியக் கலை அத தலைநகரான சென்னையை மட்டும் மையம் கொண்டுவிடாமல், மாவட்டந்தோறும் முழுவேகத்துடன் வளர்ந்தால், தமிழகத்தில் ஓர் ஓவிய இயக்கம் முழுமையடைய முடியும். இந் திசையில் ரஃபீக் அகமதுவின் பங்களிப்பு மிகவும் குறிப்பிடத்தக்கது.

– இந்